முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1597

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.02.2024, திங்கட்கிழமை

1. பரவெளி கண்ட ஞான குருவே
பரோபகாரம் மிக்க மாதவ குருவே
சரவணச் சுடரேற்றி இந்த பேருலகில்
சகலருக்கும் சர்வ ஞானம் அருளுகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சோபகிருது கலைதிங்கள் கடை திகதியதும்
(சோபகிருது வருடம் தை மாதம் 29 ம் நாள், 12.02.2024, திங்கட்கிழமை)
3. வகையென அரங்கனுக்கு சக்தி ஊட்டி
வல்லமைபட ஆறுமுகன் உடனுள்ளேன்
உள்ளபடி அரங்கன் எடுக்கும் உணவு அமுது
உயர்வான சுவாசம் வழியும்
4. வல்லமைகூட்டி ஆறுமுகன் யான் இருந்து
வாசி நடத்தி வகையான வரம்பல கூட்டி
நாளும் நாளும் அரங்கனோடு
இணைந்து அற்புதம் நடத்துகின்றேன்
5. வரம்பெற விரும்பும் உலகோர்
வணங்கி அரங்கன் குடில் வந்து
அறம் தர்மத்தில் இயன்ற உதவி செய்து
அரங்கனிடம் திருவடி தீட்சை பெற
6. தீட்சைபெற அதுநாளே அனுகுவார்க்கு
தண்டாயுதன் என் அனுகூலம் ஆசி பரிபூரணமாகும்
ஆகவே அரங்கன் தர்மசாலைகள் அத்தனையிலும்
ஆறுமுகன் யான் உள்ளிருந்து நடத்தி வர

7. அறம் போற்றும் அன்பர்கள் அனைவருமே
அகிலத்தில் அரங்கன் வழி ஞானிகளாவது உறுதியப்பா
உறுதி தந்து அரங்கனுள் உயர்ஞானத்தை
உலகமெல்லாம் ஆறுமுகன் யான் அறமாக விதைத்துள்ளேன்
8. உள்ளபடி தர்மம் பெருகும் எல்லை எல்லாம்
தண்டாயுதன் என் ஆசிக்கு உண்டான பூமியாகி
வறுமைவிலகி வரும் காலம் வளமும் வல்லமையும்
வாய்மையும் நிறைந்த தலைமையும்
9. தலைமையைப் போற்றுகின்ற தன்னார்வ தொண்டர் பெரு மக்களும்
மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஞானவான்களும் மனிதர்கள் ஆட்சிக்கே
முடிவு தரக் கூடிய மகான்கள் தலைமையும் ஆட்சியும்
ஆறுமுகன் யான் அரங்கன் வழி இனிதே நடத்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—